S. S. UTHAYAKUMAR

# சமூக ஒளி

# SAMUUKA OLI

Volume: 5

— கல்வியாண்டு —

1993 , 94

# THE JOURNAL OF SOCIAL SCIENCE UNION

## University of Jaffna

—சமூக விஞ்ஞான மன்றம்—

பொருளியல்துறை

யாழ் பல்கலைக்கழகம்.

உ

S.S.UTHAYAKUMAR
FINAL YEAR
UNIVERSITY OF JAFFNA

# "சமூக ஒளி"

# SAMUUKA OLI

## இதழ் 5

## 1993 - 94


— இணை ஆசிரியர்கள் —

சி. ம. யேசுநேசன்

எஸ். பாஸ்கரன்



SOCIAL SCIENCE UNION

DEPT. OF ECONOMICS

UNIVERSITY OF JAFFNA

# Social Science Union
# 1993 - 94
## DEPARTMENT OF ECONOMICS
## UNIVERSITY OF JAFFNA
### OFFICE BEARERS

**Names**

**Patron:**
Professor:
*N. Balakrishnan*

**Senior Treasurer**
*Mr. R. Nanthakumaaran*
**(Senior Lecturer)**

**President:**
*Mr. S. Ramesh*

**Vice President:**
*Mr. G. Thillainathan*

**Secretary:**
*Mr. R. Arivarashan*

**Asst. Secretary:**
*Miss. N. Sivagowry*

**Treasurer:**
*Mr. P. Sandirakulasingam*

**Joint Editors:**
*Mr. S. Baskaran*
*Mr. C. M. Johnson*

**Committee members:**
*Mr. M. Vigneswaran*
*Miss. J. Suganthy*
*Miss. T. A. Vinibeby*
*Mr. K. Kanagathurai*
*Mr. P. Leguori*
*Miss. J. Elilarasy*
*Mr. T. Thaventhiran*
*Mr. K. S. Yoganathan*
*Miss. K. Neethimathy*

Uthayan
Varany

# இலங்கையின் கல்வி வளர்ச்சியும் — அதன் சவால்களும் —

## "Growth of Education in Sri Lanka and Its Challenges"

**Sithamparanathan Uthayakumar**
Economics Special
Final Year

ஒரு பொருளாதாரம் அபிவிருத்தி அடைவதற்கு கல்வி வளர்ச்சி என்பது முக்கியமானது என்ற அம்சம் கடந்த நூற்றாண்டுகளில் தெளிவாகப் புலனாகிறது. இவ்வகையில் பிரபல சோவியத் மேதையான 'வனினி ஸூகோம் வின்ஸ்கி' கூறிய மனிதர்கள் கற்க வேண்டும். ஏனெனில் அவர்கள் மனிதர்கள்'' என்ற கருத்துக்கமைய மனித இனம் நாகரிகம் அடையத் தொடங்கிய காலத்தில் இருந்து ஆரம்பித்த கல்வியானது, மனித முன்னேற்றத்திற்கு ஏற்ற திறவுகோலாக கற்றல், கற்பித்தல் என்ற இரு கூறுகளும் திறமையாகச் செயற்படவேண்டும் என்பதனையும் உணர்ந்த மூன்றாம் உலக நாடுகள் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்ற காலம் முதல் தத்தம் நாடுகளில் கல்வியில் புதுமைகளை அறிமுகம் செய்வதிலும் வளர்த்தெடுப்பதிலும் தீவிர அக்கறை கொண்டன. இவ்வகையில் இலங்கையும் 1945ம் ஆண்டில் 'சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவினால்' அறிமுகமாக்கப்பட்டு 1949 முதல் இலவசக் கல்வியினை அமுலுக்கு கொண்டு வந்து இது பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் இவ்வாறு அறிமுகம் செய்த கல்வி அமைப்பானது வளர்ந்த நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து மாற்றம் இன்றி அதே அமைப்பினைப் புகுத்தியதன் விளைவாக இன்று நான்கு தசாப்தங்களின் பின் இலவசக் கல்வி மூலம் இலங்கை மக்களின் கல்வி அறிவு வீதம் 91 % ஆக அமைகின்றபோதும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு (முக்கியமாக வேலையின்மை உட்பட)ச் சவால்விட வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளியமைக்கு கல்வி அமைப்பின் குறைபாடே காரணம் ஆகும் என்பதை மறுப்பதற்கில்லை. எனவே இவ்வகையில் இன்று கல்விக் கொள்கையில் அமைப்பில் சீர்திருத்தம் ஏற்படுத்தவேண்டிய அத்தியாவசியத் தன்மை கடைப்பிடிக்கப்பட்டால் தான் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு இலங்கையின் கல்வி வளர்ச்சி பங்காற்ற முடியும்.

மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றாகவும் அதே நேரம் கல்வி வளர்ச்சியில் சுமாராக வளர்ந்த நாடுகளைப் போல 91% ஆன கல்வி அறிவினைக் கொண்டுள்ள இலங்கையின் கல்வி வளர்ச்சியைப் பார்க்கின்ற போது இங்கு 1869இல் இருந்தே ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழ் ஆங்கில மொழி மூலமான கல்வி முறை காணப்பட்டு வந்தாலும் பெருமளவு வளர்ச்சி ஏற்படவில்லை எனலாம். உதாரணமாக 1901ஆம் ஆண்டில் 21.7% ஆன மக்களே கல்வி அறிவு பெற்றிருந்தனர். இவ்வாறு வந்து கொண்டிருந்த காலகட்டத்தில் 1929ம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த கொலம்பியப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் பிரபல கல்விமானும் ஆன 'கலாநிதி கில்பற்றின்' இலங்கைக்கு வந்து இலங்கையில் உள்ள கல்விமுறையினை ஆராய்ந்துஅறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்டிருந்த ஆணைக் குழுவின் முன் உரையாற்றியபோது '' ஒரு சமூகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கு வரும் பிள்ளைகள் வகுப்பு, மொழி, இனம்,

பண்பாடு, சாதி, சமயம் என்ற வகையில் வேறுபாடு இருப்பினும் வேறுபட்ட இக் கூட்டத்தினை ஒன்றிணைக்கும் பன்மையில் ஒருமை காண்கின்ற 'நான்' என்ற நிலை ''நாம்' என்ற நிலையாக மாறத்தக்க வகை யாகக் கல்விக் கொள்கையினை ஆரம்பக் கல்வியிலேயே புகுத்த வேண்டும்'' என்றார். ஆனால் இத்தகைய கொள்கை நடைமுறைப் படுத்தப்படவில்லை. பின் 1945 சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவினால் சகலருக்கும் பெறத்தக்க வகையில் இலவசக் கல்வி புகுத் தப்பட்டு 1949ல் அமுலுக்கு வந்ததுடன் தொடர்ந்து வரும் காலங்களில் பதவிக்கு வரும் கட்சி மாறினாலும் இலவசக் கல்வி தொடர்பாக பல நடவடிக்கைகளை எடுத் தன. இவ்வகையில் 1961களில் தனியார் பாடசாலைகளில் 95% ஆனதை அரசு பொறுப்பேற்றது. (இதனுள் ஆரம்ப, உயர் தரப் பாடசாலைகள் உட்பட பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் அடங்கும்).

பின் 1969இல் கல்வி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு கல்வி நூற்றாண்டு மல ரும்வெளியிட்டதைத் தொடர்ந்து தாய்மொ ழிக்கல்வி அறிமுகம் ஆக்குவதன் மூலம் அதிக மக்கள் நலன் பெற, கல்வி கற்க உதவியது. இதனை விட 1964இல் 5ம் வகுப்புக்கான புலமைப்பரிசில் திட்டமும் கட்டாய ஆரம்பக் கல்வி முறையும் கொண்டு வரப்பட்டது. இதனை விட நாடு முழுக்க தேசிய 1ஆம் தரப் பாடசாலைகளை உருவாக்கும் திட் டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத னைத் தொடர்ந்து 1972 இல் பதவிக்கு வந்த அரசு '' புதிய பாதை '' ஒன்றினைக் கல்வி அமைப்பில் புகுத்தி பழைய கல்விப் பொதுத் தராதர நிலையை மாற்றி தேசிய சான்றிதழ் கல்வி, வாழ்க்கைத்திறன், தொழில் நுட்பக் கல்வி என்பவற்றைப் புகுத்தியது. இதனைத் தொடர்ந்து இதனை உயர்வர்க்கத்தினர் எதிர்க்க 1977 இன் பின் அரசு மாறிய உடன் 1978-ல் உயர் கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டதுடன் க. பொ. த. சா/த., க. பொ. உ/த. என்ற முறை கொண்டு வரப்பட்டது. பின்னர் 1980 இல் ஜெயவர்த்தனாவால் இலவசப் புத்தகத் திட்டம் கொண்டுவரப்பட்டது. பின் 1981 இல் ஐக்கிய தேசியக் கட்சி மூலம் '' வெள்ளை அறிக்கை '' கொண்டு வரப் பட்டதுடன் 1985 இல் ஆசிரியர்களின் சம் பள முரண்பாட்டை நீக்க 'தயாரத்தினா' சம்பளத்திட்டம் வந்ததும், தொடர்ந்து 1988 இல் புதிய ஆட்சியில் மதிய உணவு மீண்டும் வந்ததுடன் பாடசாலைச் சீருடை யும் கொண்டுவரப்பட்டு உயர் கல்வியில் அதிக எண்ணிக்கையினர் தெரிவும், 1994-ல் புதிய ஆசிரியர் சேவை புகுத்தப்பட்டு வந் துள்ளமையும் இவ்வாறு பல மாற்றங்களை ஒவ்வொரு அரசும் எதிர்க்கட்சியின் ஆதர வின்றி தம் எண்ணப்படி மேற்கொண்டமை யால் கட்சி மாறக் கொள்கைகள் மாறியது. ஆனால் கல்வித் திட்டம் (முறைசார், முறை சாரா) கல்வித் திட்டத்தில் இன்றும் (1995 இல் உயர்தரப்பாடத் திட்டத்தில் சிறுமாற்றம் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ள போதும்) வளர்ந்த மேற்கு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்த கல்விக் கொள்கையே நடைமுறையில் உள்ளதைக் காணலாம்.

எவ்வாறு இருப்பினும் இலங்கையில் 1949 இன் பின் இலவசக் கல்வியின் வருகை யுடன் தொடர்ந்து வந்துகொண்டு இருக் கின்ற தசாப்தங்களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டதைப் புள்ளி விபர ரீதியாக நோக்க முடியும். இவ்வகையில் 1901 இல் 21 7% ஆக இருந்த கல்வி வளர்ச்சி வீதம் 1921இல் 34.2% ஆகி 1946 இல் 58% ஆகி 1981 இல் 85. 4% ஆகி 1993 இல் 91% ஆக உயர்ந்து உள்ளதுடன் கல்வியில் அரசின் செலவு மொத்த அரச செலவில் 1950 இல் 5% ஆக வும் 1964/65 இல் 15.8% ஆகவும் 1970 இல் 13.67% ஆகவும் 1977 இல் 11. 1% ஆகவும் 1990 இல் 8% ஆகவும் 1992 இல் 7.2% ஆக வும் காணப்படுகின்றது. இது 1992 இல் 12000 மில்லியன் ரூபா ஆகும். தனிநபர் கல்வி சுமார் 13 டொலர் ஆகக் காணப்பட்டு இப்போது சற்று உயர்ந்துள்ளது. இதே போல 1946 இல் 5946 ஆகக் காணப்பட்ட

பாடசாலைகளின் எண்ணிக்கை 1992 இல் 10590 ஆகி அதில் 1 ஏபி பாடசாலை 5%, 1 சி பாடசாலை 15% தரம் 11 பாடசாலை 36% உம் தரம் 111 பாடசாலை 4% உம் ஆகும். அதேபோல 1946 இல் 5, 93, 400 மாணவர்கள் கற்றனர். இது இன்று 42, 80, 000 ஆக சனத்தொகையில் 25% ஆக உயர்ந்துள்ளது அடுத்தாற்போல 1946 இல் 14242 ஆக இருந்த ஆசிரியர் எண்ணிக்கை 1992 இல் 182500 ஆக மொத்த வேலைப் படையில் 3% ஆக உயர்ந்துள்ளதுடன் ஆசிரியர், மாணவர் விகிதத்தை முறையே 1: 26.6 ஆக இருந்து 1:23 ஆக முன்னேறியுள்ளது. மேலும் இங்கு தற்போது 5-19 வயது வரையானோர்களில் 75% த்தினர் பாடசாலையில் உள்ளனர் எனலாம். பல்கலைக் கழகத்திற்குக் கூட அனுமதியானது அண்மைக் காலத்தில் கூடியுள்ளது. 1989 இல் 6469 பேர் சேர்க்கப்பட்டனர். இது 1994 இல் 8540 பேராகவும் 1994 இல் சகல பல்கலைக் கழகங்களிலும் உள்ள சகல வருட மாணவர்களதும் எண்ணிக்கை 30764 ஆகும். தற்போது விரிவுரையாளர்; மாணவர் விகிதம் 1:13 ஆகவும் பல்கலைக்கழக நிர்வாகத்தில் இயங்கும் கல்வி அலுவலர்கள் 2319 பேர் ஆகவும் மொத்தமாக 9 பல்கலைக் கழகங்களிலும் உள்ள அதே வேளை திறந்த பல்கலைக்கழக புதிய மாணவர் 1994 இல் 11314 பேராகவும் மொத்த மாணவர் இது வரை 20022 பேர் ஆகவும் இங்கு 382 ஆசிரியர்களும் உள்ளனர். இதனைவிட 9 தொழில்நுட்பக் கல்லூரிகளும்11 இணைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களும் 9 பட்டப் பின் படிப்பு நிறுவனங்களும், 2 பட்டப்படிப்புக் கல்லூரிகளும் உள்ளன. இதனைவிட ஜெயவர்த்தனபுர, பேராதனை, யாழ், பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டதாரி கற்கைநெறி உள்ளமையும் அதிக மாணவர்கள் கற்க உதவுகின்றது. இவற்றைவிட மாகாணங்களுக்கேற்ப ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் உள்ளன. இவ்வாறாக 90 இன் தசாப்தங்களின் ஆரம்பத்தில் கல்வி பல கோணங்களில் முன்னேறியுள்ளதை காட்டுகின்ற புள்ளி விபரங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றனவே யன்றி இது எமது பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையாது பெரும் சவாலாக உள்ளது. இவ்வகையில் முக்கிய விடயமாக 'கல்விக் கொள்கையும் வேலை வாய்ப்பும்' உள்ளது, தற்போது வருடம் ஒன்றுக்கு 120,000 வேலை வாய்ப்புக்கள்தான் கிடைக்கின்றன. ஆனால் வருடா வருடம் 2,80,000 பேர் புதிதாக தொழிற் படையில் சேரும்போது வேலையின்மை கூடுவதுடன் படித்தவர்கள் மத்தியில் 15% வேலையற்று இருக்கின்றனர். எனவே இவ்வாறாக இலங்கையில் கல்விக் கொள்கையில் உள்ள பிரச்சனைகளை ஆராயும் அதே வேளை நாட்டினை அபிவிருத்தி அடையச் செய்ய முன்வைக்கக்கூடிய சில தீர்வுத்திட்டங்கள் பற்றியும் சிந்திக்கவேண்டி உள்ளது.

இவ்வகையில் இலங்கையின் கல்வி அமைப்பு முறையானது உண்மையில் மாறி வரும் சமூக பொருளாதார நிலமைகள் அந்த மாற்றங்களுக்குரிய கல்வி முறையினை வேண்டிநிற்க வேண்டியதுடன், கல்வியின் இசைவாக்கத்துடன் சமூகநிர்மாணம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியதுடன் கல்விமுறை சூழலின் வளங்களையும் மாணவர்களின் திறன்களையும் உச்சப்பயன் தரக் கூடிய வகையில் வளர்த்தெடுக்குமாறு துணைநிற்கக் கூடியதாகவும் எம் நாட்டு சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப நெகிழ்வடையக்கூடிய ஒன்றாகவும் கல்வியமைப்பின் பாடநெறி, கற்கைநெறி அமைய வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறின்றி முழுக்க முழுக்க மேற்குலக நாடுகளின் கற்கை நெறியினையே இறக்குமதி செய்து இங்கு புகுத்தப்பட்ட, புகுத்தப்படுகின்ற ஒரு நிலை உள்ளமையாலேயே பல பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக உள்ளன.

இவ்வாறாக இலங்கையின் கல்வியமைப்பின் மூலம் ஏற்பட்டதும், ஏற்படுகின்றதுமான பிரச்சினைகளை நோக்கின்,

I) கலைத்திட்டமிடலில் உள்ள குறைபாடுகள் மூலம் ஏற்படும் பிரச்சினைகள்

1. வளர்முக நாடுகள்போல் ஆறு வயதிலிருந்து அனுபவம் சிந்தனையூட்டும் கல்வியினைப் புகட்டாது இங்கு கலைத்திட்டத்தில் ஐந்து வயதிலிருந்து மனப்பாடம் செய்வதும், மீளச் சொல்வதும், பரீட்சைக்குத் தயார் படுத்துவதுமான பாடத்திட்டம் அமைந்துள்ளமை மாணவர்களின் கற்பனைவிருத்தி, சிந்தனை ஆளுமைக்குத் தடையாக அமைகின்றது. அத்துடன் இன்று இருக்கின்ற அரச சார்பற்ற தனியார் மூலமான மூன்று வயது முதலான கல்வி (Pre School) முறை உள்ளமையும் பாரிய தாக்கம் கொண்ட ஒன்றாக உள்ளது.

2. ஆரம்ப, இடைநிலை கல்வி என்பன உயர் கல்விக்குரிய ஒரு அடிப்படைத் தேவையாகக் கலைத்திட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளமையால் சகல மாணவரும் தம் அறிவிற்கேற்ப பாடங்களைத் தெரிவு செய்யமுடியாது. ஆண்டு 1 முதல் ஆண்டு 11 வரை உயர் கல்வி பெறவேண்டும் என்ற ஒரே நோக்கிற்காக கல்வி கற்று இறுதியில் உயர் கல்வியில் பெரும் பகுதியினர் நுழைய முடியாதிருக்கும் தன்மையானது நாட்டில் காணப்படும் வளங்களைக்கொண்டு சுயதொழில் செய்யக்கூடிய அறிவினைப் பெறமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட கலைத்திட்டத்தில் உள்ள குறைபாடே காரணம் எனலாம்.

3. சுயமொழிக் கல்வியினால் கற்போர் எண்ணிக்கை கூடியதும் க.பொ.த. உ/த மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெறக்கூடிய பாடங்களைத் தெரிவு செய்து பல்கலைக்கழக நுழைவுக்கெனப் போட்டி இடும் நோக்கிலும் அதே வேளை பாடத்திட்டம் நீண்டதாக இருப்பதால் பாடசாலைகளில் குறிப்பிட்ட காலத்தில் அவை முழுமையாக கற்பித்து முடிக்காமையும் காரணமாக தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது வறிய மாணவர்கள் பாதிப்படையக் காரணமாகின்றது. எனவே இலவசக்கல்வி மூலம் கலைத்திட்டத்தில் உள்ள குறைபாட்டால் வருமானச் சமயின்மையை மேலும் உயர்த்தும் பிரச்சினையாக உள்ளது.

4. கடும் போட்டியின் மத்தியிலும் பல்கலைக்கழகம் புகும் மாணவர்கள் கற்கக்கூடிய பாடத்திட்டங்கள், துறைகள் என்பன வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு சாதகமாக உருவாக்கப்பட்ட அதே பாடத்திட்டத்தையே இங்கும் புகுத்தியதன் விளைவாக மாணவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு உதவக் கூடியதாக அமையாத அதேவேளை போதிய தொழில் வாய்ப்பும் அமையாத கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு குறிப்பாக சுயமொழியிலேயே கற்பித்தல், பரீட்சை என்பன உள்ளபோதும் உசாத்துணைகள் அன்னியமொழியில் உள்ளமையும் பிரச்சினைக்குரிய ஒன்றாகும்.

5. எம்நாட்டு கல்விக்கலைத் திட்டத்தில் ஜப்பான் போன்ற நாடுகள் போல புதிய தொழில் நுட்பங்களை உள்வாங்கக்கூடிய ஒரு திட்டமாக அல்லாது குறிப்பாக உயர்கல்விச் சான்றிதழ் மட்டும் பெறுகின்ற போதும் உற்பத்தித்திறனை கூட்ட முடியாதுள்ள அதே நேரம்இது அபிவிருத்தியுடன்இருவழித் தொடர்பினை கொண்டிருக்காமையாலும் பொருளாதாரத்திட்டமிடலும் கல்வித் திட்டமிடலும் வேறுபடுவதால் எதிர்க்கட்சி, ஆளும்கட்சி இரண்டும் சேர்ந்து உருவாக்காத ஒரு கல்வித் திட்டத்தை கலைத்திட்டம் கொண்டிருப்பதால் வருமான ஏற்றத்தாழ்வு, தொழில் வாய்ப்பு போன்ற கோணங்களில் அபிவிருத்திக்கு சவாலாகவே உள்ளது.

(ii) வள ஒதுக்கீட்டில் உள்ள குறைபாடுகள் மூலம் ஏற்படும் பிரச்சினைகள்

1. வள ஒதுக்கீட்டில் கிராம, நகர ஆரம்பப் பாடசாலைகளிடையே ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. நகரில் 20 மாணவருக்கு ஒரு ஆசிரியரும் கிராம, மலையகப் பாடசாலைகளில் 35 அல்லது 40 மாணவருக்கு ஒரு ஆசிரியரும் உள்ள நிலை வள ஒதுக்கீட்டின் பாரபட்ச நிலைமையால் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இது கிராம அபிவிருத்தியைப் பாதிப்பதுடன் வருமானச் சமமின்மையை மேலும் உயர்த்த தூண்டு கோலாகவும் உள்ளது.

2. இடைநிலைப் பாடசாலைகளை எடுத்தால் நகர் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் போன்றன வள ஒதுக்கீட்டில் கூடுதலாகவும் கிராம, மலையகப் பகுதிகளில் குறைவானதாகவுமே உள்ளமை இடைநிலைக் கல்வியிலும் மாணவர்கள் விலக்கப்படும் நிலையைக் காட்டுகின்றது. இதுவும் வருமான வேறுபாட்டை விரிவடையச் செய்யும்.

3. உயர்கல்வியிலும் வளஒதுக்கீட்டில் பிரதேச வேறுபாடுகள் உண்டு. இன்று மாணவர்கள் பிரதேச ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் கலை வர்த்தகத்துறையினை விட விஞ்ஞான, மருத்துவத் துறைகளுக்கு கூடிய வள ஒதுக்கீடு தேவை. இன்று மாணவர்களின் தொகைக்கேற்ப வள ஒதுக்கீடு இல்லாமையால் கல்வித்தரம் வீழ்ச்சியடைவதுடன் கல்வியைப் பூர்த்தி செய்யும் காலமும் நீடித்துள்ளது. உதாரணமாக இன்று யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் கற்கை நெறியைப் பூர்த்தி செய்வதில் காலம் நீடிக்க பிரதேசரீதியான வள ஒதுக்கீட்டு வேறுபாடே காரணமாகும்.

4. வளஒதுக்கீடு என்ற வகையில் செலவீட்டை எடுத்தால் ஆரம்ப இடைநிலை, உயர் கல்வி மீதான செலவீட்டில் வேறுபாடுள்ளது. குறிப்பாக ஆரம்ப இடைநிலை மாணவர்களுக்கு குறைந்த செலவும் உயர்தர மாணவர்க்கு கூடிய செலவும் ஏற்பட்டாலும் ஆரம்ப இடைநிலை மாணவரால் சமூகம் பெறும் நன்மையைவிட உயர்கல்வி மாணவர்களின் மூலம் சமூகம்பெறும் நன்மை குறைவாக இருப்பதும் பிரச்சினைக்குரியது. இதனை பின்வரும் உதாரணம் காட்டும்.

| | கல்வி<br>ஆரம்ப: இடைநிலைக்கல்வி | கல்வி<br>இடைநிலை : உயர்கல்வி |
|---|---|---|
| வளர்ந்தநாடு: செலவு | 1 : 6 . 6 | 1 : 17 . 6 |
| நன்மை | 1 : 1 . 4 | 1 : 2 . 4 |
| வளர்முகநாடு : செலவு | 1 : 1 . 9 | 1 : 8 . 6 |
| நன்மை | 1 : 2 . 4 | 1 : 6 . 4 |

இங்கு செலவு, நன்மை ஒப்பீட்டுரீதியாக வளர்ந்தநாட்டைவிட வளர்முகநாட்டில் (இலங்கைஉட்பட) உயர்கல்விக்கான செலவு கூடுதலாகவும் நன்மை குறைவாகவும் உள்ளமை பிரச்சினைக்குரியதாகும்.

5. பொதுவாகக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு என்று பார்த்தால் முன்னரைவிட தற்போது கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைந்து வருவதை மொத்த அரச செலவீட்டில் காணலாம்.

| ஆண்டு<br>செலவு | 1964 / 65<br>15.8% | 1970<br>13.6% | 1977<br>11.1% | 1990<br>8% | 1992<br>7.2% |
|---|---|---|---|---|---|

இவ்வாறு கல்விமீதான செலவு குறைந்து வருவது கல்வி அபிவிருத்தியைக் கவனிக்காது பாதுகாப்புச் செலவு போன்ற வேறு தேவைகளில் வளங்கள் ஒதுக்கப் படுவது பிரச்சினைக்குரியது.

(iii) கல்வி நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள் மூலம் ஏற்படும் பிரச்சினைகள்

1. கல்வி நிர்வாகமும் தமது பிள்ளைகள் படிப்பதுடன் நகர்புற பெற்றோரின் அழுத்தம் உள்ளமையாலும் நகர தேசிய பாடசாலைகளில் கூடிய அக்கறை கொடுப்பதுடன் இவ்வாறான பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பதற்கு பணம் அறவிடப்படுதலையும் அக்கறையீனமாக விடுவதும் பிரச்சினைக்குரியது.

2. கல்வி நிர்வாகிகள் மேற்பார்வையிலும் ஆசிரிய இடமாற்றங்களை அடிக்கடி மேற்கொள்வதாலும் பல ஆசிரியர்களிடம் ஒரு பாடத்தைக் கற்க வேண்டிய நிலமையும் மேற்பார்வை போதியளவு இன்மையால் ஆசிரியர்களின் அக்கறையின்மையும் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் உள்ளீர்க்கப்பட நிர்வாகத்தில் அசமந்தப் போக்கே காரணமாகும். இது காலப்போக்கில் மேலும் பல பிரச்சினையை உருவாக்கும்

3. உயர்கல்வி நிர்வாகத்தினர் தமக்குக் கீழ் உள்ள ஊழியவளத்தையும் கையாளப்படும் நிதியையும் கூட்டவென மாணவர்களைக் கூடுதலாக எடுக்க முயற்சி செய்வதால் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து பல பிரச்சினையை ஏற்படுத்துகின்றது.

4. இலங்கையின் தேசியக்கல்வி நிர்வாகத்தினை எடுத்தால் கூட இன்று சுய மொழிக் கல்வி அறிமுகமான பல தசாப்தங்களின் பின்னரும் சிங்கள மொழியே கூடியளவு நடைமுறையிலிருப்பதும் அதுபோல மானியக்குழு நிர்வாகமும் பல்கலைக்கழகத்தெரிவில் தரப்படுத்தலை பிரதேசரீதியாக மட்டுமன்றி இனரீதியாகவும் மேற்கொள்வதால் சிறுபான்மையினத்தவர் அறிவு இருந்தும் கல்வியில் பெரும் சவாலை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

5. மேலும் கல்வி நிர்வாகத்தை நடாத்தும் பொறுப்பை கல்வி அமைச்சிடம் பொறுப்பளித்தும் அதன் கீழ் பல பிரிவினரிடம் நிர்வாகம் இருந்தும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து கல்வித்திட்ட மிடலாளர்கள் பொருளாதாரத்திட்டமிடலாளர்களுடன் இணைந்து திட்டமிடாமையால் அடிக்கடி ஏற்படும் கட்சி மாற்றங்களால் கல்வியமைச்சர்கள், கல்வி நிர்வாகிகள் என்பன மாற்றப்படுவதும் பலபிரச்சனையை தோற்றுவிக்கின்றன.

இவ்வகையில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றினை முற்றுமுழுதாக இச்சிறு கட்டுரையில் ஆராய முடியாத போதிலும் இலங்கையின் கல்வி அமைப்பில் உள்ள, இங்கு சுருக்கமாக மேலோட்டமாக ஆராய்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கப் பல

ஆலோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும். இவ்வகையில் குறிப்பாக பின்வரும் வழி முறைகளைக் குறிப்பிடலாம்.

**I. கலைத்திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள்**

1. தற்போது தனியாரினால் வழங்கப்படும் 3 வயது முதல் 5 வயது வரையான கல்வியை கட்டமைப்பின் கீழ் கொண்டு வருதல், மனப்பாடம் செய்கின்ற கல்வியைப் போதிக்காது சிந்தனை, ஆளுமையை வளர்க்கின்ற அனுபவக் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தல்.

2. ஆரம்பப்பாடசாலைகளில் கூட 5 முதல் 8 வயதுவரையில் மேற்படி அனுபவக் கல்வியினையே போதிக்கக்கூடிய திட்டத்தை உருவாக்கி குழந்தைகளின் ஆளுமையை வளர்க்க வேண்டும்.

3. ஒவ்வொரு பிரதேசத்தின் மூலவளங்களை அடிப்படையாகக் கொண்டு கலைத்திட்டத்தினை அமைத்து பொருளாதார அபிவிருத்தியுடன் கல்வியமைப்பு இருவழித்தொடர்பு ஏற்படும் வகையில் கல்வித்திட்டத்தை அமைத்தல்.

4. பிரபல சோவியத் மேதை 'வனினி ஸீகோம் வின்ஸ்கி' கூறியதுபோல "மனிதர்கள் கட்டாயம் கற்க வேண்டும். ஏனெனில் அவர்கள் மனிதர்கள்" என்ற வகையில் மாணவரிடத்தில் அடிப்படை உணர்வை ஏற்படுத்தி மனித முன்னேற்றத்தை உயர்த்தும் வகையில் கற்றல் கற்பித்தல் என்ற இரு திறவுகோலும் அமைய வேண்டும்.

5. இதேபோல பிரித்தானிய ஸ்கொட்லாண்டின் ஒரு நகரமான டண்டியில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் பொறிக்கப்பட்டுள்ள நானும் பள்ளியினால் பெருமையடைய வேண்டும். பள்ளியும் என்னால் பெருமையடைய வேண்டும். "This is our school : make me Proud of it : is proud to me" என்ற கருத்துக்கமைய கல்விச்சிந்தனையை உருவாக்கக்கூடிய கலைத்திட்டமானது உருவாக்கப்பட வேண்டும்.

6. முன்னர் குறிப்பிட்ட அமெரிக்கப் பேராசிரியரான கலாநிதி கில்பற்றின் கூறிய வாசகமான "ஒரு சமூகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கு வரும் பிள்ளைகள் வகுப்பு, மொழி, இனம், பண்பாடு, சாதி, சமயம் என்றவகையில் வேறுபாடு இருப்பினும் வேறுபட்ட இக்கூட்டத்தை ஒன்றிணைக்கும் பன்மையில் ஒருமை காண்கின்ற 'நான்' என்ற நிலை 'நாம்' என்ற நிலையாக மாறவேண்டும்"

7. ஆசிரியர்களின் வினைத்திறன், பயிற்சி என்பவற்றைக் கூட்டக்கூடிய வகையில் கலைத்திட்டம் அமைய வேண்டும். இதனை நியூட்டன் பேக்கரின் கூற்றான 'பட்டம் பெற்றவர்கள் பின் கற்றவற்றை நிறுத்தின் மறுநாள் அவர் கல்லாதவர் ஆகின்றார்' என்பது விளக்கும். இதற்கமைய ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சி மேற்படிப்பு கற்பித்தல் நுட்பம், ஆசிரியர்மாணவர் நல்மனப்பாங்கு போன்ற தகமைகள் கலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும்.

8. உயர்கல்வியிலே வளர்ந்த நாட்டுக் கல்வியை இறக்குமதி செய்வதை விடுத்து எமது நாட்டுக்குத் தேவையான புதிய தொழில் நுட்பங்களை உள்வாங்கக்கூடிய பாடவிதானங்களைப் புகுத்த வேண்டும். இதனைப்பற்றி அன்ரானிய ஜனாதிபதி யூலியட்நாயரலேன் குறிப்பிடுகையில் "பல்கலைக்கழகக்கல்வியானது ஒரு நாடு அபிவிருத்தியடையும் காலத்தில் உடனடித் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்" என்றார். இதற்கேற்ப மானிட இலக்கு, எண்ணங்

களை உருவாக்கி உடனடித் தேவைகளிற்கு தக்கதாக கலைத்திட்டம் அமையவேண்டும். இவ்வாறு அமையின் இது தானாகவே வேலைவாய்ப்பினைக் கொடுக்கும்.

ii. வளப்பங்கீடலில் மேற்கொள்ள வேண்டிய தீர்வுகள்

1. கல்வியின் கேள்வியைத் தீர்மானிக்கின்ற முக்கிய பொருளாதார, பொருளாதார ரீதியற்ற காரணிகளில் குறிப்பாக போசாக்கின்மை, வறுமை, உடல்நலக் குறை, சுற்றுச்சூழல் பின்னடைவு என்பவற்றினை நீக்கும் முகமாக வளங்களை மீள்பங்கீடு செய்து தேசிய ரீதியில் ஆரம்பக்கல்வியில் சம சந்தர்ப்பம், சமத்துவம் ஏற்பட வழி செய்ய வேண்டும்.

2. ஆரம்ப இடைநிலைக் கல்வியில் உள்ள வறியமாணவருக்கு உதவி செய்து திறமையுள்ளோரை உயர்கல்வி பெற வாய்ப்பினை ஏற்படுத்தலாம்.

3. கிராம, நகர, மலையக என்ற வேறுபாடின்றி சகல இடங்களிலும் விஞ்ஞான ஆய்வுகூட வசதி போன்ற வள ஒதுக்கீட்டைச் செய்து சகலரினதும் கல்வியை மேம்படுத்த முடியும்.

4. கிராம, மலையக கஷ்டப்பிரதேசங்களுக்கு திறமையான ஆசிரியர்களை ஒதுக்குவதன் மூலம் மாணவர்களை முன்னேற்றி தேசிய ரீதியில் கல்வியில் ஓரளவு சமநிலை வளர்ச்சியை ஏற்படுத்தலாம்.

5. உயர்கல்வியைப் பொறுத்து பிரதேச இன வேறுபாடின்றி வளங்களை ஒதுக்கீடு செய்து தேசிய ரீதியில் கல்வியை அபிவிருத்தி செய்து அதனூடாக நாட்டின் அபிவிருத்திக்கு உதவலாம்.

iii. நிர்வாகத்தில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள்

1. கல்வியமைச்சானது ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி இரண்டும் இணைந்து திட்டமிட்டு வழிநடாத்தி மேற்பார்வை செய்ய வேண்டும். கட்சி மாற்றத்திற்கேற்ப கல்வியமைப்பு மாற்றத்தை தவிர்த்து காலத்தின் தேவைக்கேற்ப கல்வியமைப்பு நெகிழ்வுடைய வேண்டும்.

2. தம்பிள்ளைகளின் கல்வியில் உள்ள அக்கறைபோல சகல மாணவரையும் கருதுகின்ற மனப்பான்மை நிர்வாகிகளிடம் உருவாக்குவதுடன் அத்தகைய அர்ப்பணிப்புக்களை செய்யக்கூடிய நிர்வாகிகளை பதவியில் அமர்த்தல் வேண்டும்.

3. கல்வியதிகாரிகள் சகல பிரதேசத்திலும் கிராம, நகர வேறுபாடு இன்றி தத்தமது மாவட்டங்களில் கிடைக்கின்ற ஆசிரிய வளம் நிதிவளம் பௌதீக வளங்களைப் பங்கீடு செய்வதில் திறமையைப் பேண வேண்டும்.

4. ஆசிரியர்களின் சம்பள உயர்வை அனுமதிக்கும் போது குறிப்பிட்ட ஆசிரியரின் கடமை, கற்பித்தல் ஒழுங்கு, குறித்த பாடத்தின் பெறுபேறு பாடத்திட்டத்தை குறித்த காலத்தில் பூரணமாக முடிக்கும் திறமை என்பவற்றைக் கருத்திற்கொண்டு அனுமதிக்க வேண்டும். ஆசிரியர் நியமனத்திலும் சமூக சேவை மனப்பாங்கு உடையோருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

5. கல்வியமைச்சின் கீழ் உள்ள கலைத்திட்டம், பாடத்திட்டம் பரீட்சைகளைத் திட்டமிடுகின்ற நிர்வாகிகள் பொருளியலாளருடன் இணைந்து பொருளாதாரத்திற்கு தேவையான திட்டங்களை பாடத்திட்டத்தில் புகுத்தி கலைத்திட்டத்தினை அமைத்து நிர்வகிப்பின் அது பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

6. உயர்கல்வியில் கூட நிர்வாகம் ஆனது மாணவர் எண்ணிக்கையைவிட தரத்தினைக் கருத்தில் எடுக்க வேண்டும். என்ற பல வகையான கோணங்களில் தீர்வுகளை முன்வைக்கலாம்.

சுருக்கமாகக் கூறின் இலங்கையில் இலவசக்கல்வி முறை உள்ள அதே நேரம் இலங்கைக்கு பொருத்தமற்ற மேற்குலக வளர்ந்த நாடுகளில் காணப்பட்ட கல்வி முறைகளை இறக்குமதி செய்து சிறு மாற்றத்துடன் இங்கு புகுத்திய அதே நேரம் இலங்கையில் கல்விக் கலைத்திட்டத்திலும் வளஒதுக்கீட்டிலும் நிர்வாகத்திலும் உள்ள பல குறைபாடுகள் காரணமாக கல்வி வளர்ச்சியுற்றுள்ள போதும் இன்று பல சவால்களை எதிர் நோக்க வேண்டிய இக் கட்டான நிலையில் உள்ளது. இதனை இனப் பிரச்சனையில் இருந்து விடுபட்டு எதிர் காலத்தில் பொருளாதார அபிவிருத்திக் கேற்ற வகையில் கல்வி அபிவிருத்தி அமைய வேண்டுமாயின் ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் இணைந்து பொருளியல்திட்டமிட லாளர்களும் கல்விக் கலைத்திட்டமிடலாளர் களும் ஒருங்கே இணைந்து ஒருமித்த பாதையில் பல மாற்றங்களை கலைத் திட்டம், வளஒதுக்கீடு, கல்வி நிர்வாகம் என்பவற்றில் ஏற்படுத்தின் கல்வி வளர்ச்சி அடையக்கூடிய அதே நேரம் அவ்வளர்ச்சி பொருளாதார அபிவிருக்குப் பல கோணங் களில் உதவும் என்று கூறின் மிகையாகாது.


**உசாத்துணை நூல்கள்:**

1. பொருளியல் நோக்குகள் 1994 மே—யூன், 1994 நவம்பர், 19984 மே—யூன்
   பொருளியல் நோக்குகள் 1976 மே 1976 செப்டம்பர்

2. சூரியர் மே. 1978 பக்கம் 4

3. வணிகச்சுடர் 1993 — 1994 '' இலங்கையில் கல்வி நோக்கங்களில் வர்த்தகக் கல்வியின் பங்களிப்பு '' — செல்வி. நா. வேலுப்பிள்ளை

4. கல்வி நூற்றாண்டு விழா மலர் iii

5. புதிய பாதை — 1972

6. வெள்ளை அறிக்கை — 1982

7. 1990ம் ஆண்டு ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை

8. 1985-01—01ம் திகதி '' தயாரத்தின '' ஆசிரிய சம்பளம் சுற்றுநிருபம்

9. 1994-10-06ம் திகதி புதிய ஆசிரிய சேவை சம்பள சுற்றுநிருபம்

10. ஆய்வு: காலாண்டிதழ் ஏப்பிரல்—யூன் 1987 '' சமூகத் தேவையைப் பூர்த்தி செய்வதில் எமது கல்வி முறையின் ஆற்றாமை.

11. கலைஞானம்—நான்காம் வெளியீடு.